பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 03 சனிக்கிழமை 16.05.2020 கதிர் 192

## 935 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 16

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் 02 »

## சர்வதேச நிதியுதவி இன்னும் எமக்குக் கிடைக்கவில்லை

### கூறுகிறார் அமைச்சர் பந்துல

கொழும்பு, மே 16

இன்னமும் சர்வதேச நிதி உதவிஎமக்குக்கிடைக்கவில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பக்கம் 02 »

## பதில் முதல்வரிடம் அதிகாரத்தை நேற்று ஒப்படைத்தார் ஆனல்ட்!

யாழ்ப்பாணம், மே 16

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்ய யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இ.ஆனல்ட், இரண்டு மாதங்களுக்கு பின்பு நேற்றுத் தனது அனைத்துப் பொறுப்புக்களையும் மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசனிடம் ஒப்படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே து.ஈசன் பக்கம் 02 »

## இனி இது ரகசியம் அல்ல!

சுமந்திரனின் சிங்களச் செவ்வி தொடர்பில் நேற்று சம்பந்தன் ஐயா வழங்கிய தீர்ப்புடன் விவகாரம் முடிவுக்கு வந்துவிட்டது. இனியும் 'ஸ்விங்கம்' மாதிரி அதை இழுத்தடிப்பது அர்த்தமற்றது; அபத்தமானது. எனினும் விட்ட பக்கம் 02 »

# சர்வதேச ரீதியில் கொரோனாவை வென்றுள்ளோம்!

## இராணுவத் தளபதி பெருமிதம்



கொழும்பு, மே 16

சர்வதேச ரீதியில் கொரோனாவை வென்றுள்ளோம் என்று பெருமிதம் தெரிவித்திருக்கின்றார் கொரோனா தடுப்பு அணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா.

இலங்கையில் கொரோனா தொற்றுக் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் தற்போது எவையும் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். பக்கம் 02 »

## பி.சி.ஆர்.பரிசோதனைகளை குறைப்பதனால் பேராபத்து!

கொழும்பு, மே 16

பி.சி.ஆர். பரிசோதனைகளைக் குறைப்பது பாதிப்பை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றபோதிலும் நாடு முற்றாக ஆபத்திலிருந்து விடுபடவில்லை என்பதால் பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகாரிகள் தொடரவேண்டும் என அவர் கோரியுள்ளார்.

தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டில் சுதந்திரமாக நடமாடுவதை தவிர்ப்பதற்காக பி.சி.ஆர். பரிசோதனைகளை தொடரவேண்டும் எனவும் அரச மருத்துவ பக்கம் 02 »

## ஐ.தே.கவின் உயர்பதவிகளில் மாற்றம் செய்ய ரணில் முஸ்தீபு?

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு, அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சாகல ரத்நாயக்க நியமிக்கப்படவுள்ளார் எனச் செய்திகள் வந்துள்ளன.

பொதுச் செயலாளர் பதவியில் உள்ள முன்னாள் அமைச்சர், அக்கிலவிராஜ் காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் பதவிக்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்படுவார் என்றும் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

அதேவேளை தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவராக உள்ள முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க அப்பதவியிலிருந்து நீக்கப்படவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தத் தீர்மானத்திற்கு கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர் என சிறிகொத்த தகவல்கள் வெளியாகி உள்ளன.

## யாழ்.பல்கலையில் நேற்று 2ஆம் நாளாக நினைவேந்தல்



யாழ்ப்பாணம், மே 16

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் மற்றும் குமுதினிப் படுகொலை நினைவு தினமும் நேற்று யாழ். பல்கலைகழக முகாமைத்துவ பீடத்தில் பக்கம் 02 »

## நாடு முழுவதிலும் கனமழை பெய்யும்

கொழும்பு, மே 16

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள தென் அந்தமான்கடற்பரப்புகளிலும்குறைந்த அழுத்தப் பிரதேசம் தொடர்ந்து நிலைத்திருக்கின்றது.

இது எதிர்வரும் 12 மணித்தியாலங்களில் அப்பிரதேசத்திலேயே மேலும் குறைந்த அழுத்தத்திற்கு உள்ளாகும் வாய்ப்பு காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அது தெற்கு வங்காள விரிகுடா கடல் பிரதேசத்தில் சுழல் சூறாவளியாக மாறும் வாய்ப்பு காணப்படுவதோடு, நாளை வரை வட மேல் திசையிலும் அதன் பின்னர் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை வட கிழக்கு வங்காளா விரிகுடா பிரதேசத்தை பக்கம் 02 »

## மட்டு.கரையோரக் கிணறுகள் நேற்று மாலை திடீரென வற்றின

மட்டக்களப்பு, மே 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி தொடக்கம் அக்கரைப்பற்று வரையான கரையோரப் பிரதேசங்களில் உள்ள கிணறுகள் நேற்று மாலை திடீரென 3 அடிக்கு மேல் வற்றின என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

நாவலடி, கல்லடி, நாவற்குடா, காத்தான்குடி, கிரான்குளம், ஆரையம்பதி, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, குருக்கள்மடம், செட்டிப்பாளையம், மாங்காடு, தேத்தாத்தீவு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி, பக்கம் 02 »

## தேர்தலை இலக்காக கொண்டே விசாரணை

### மங்கள குற்றச்சாட்டு

கொழும்பு, மே 16

தேர்தலை இலக்காகக் கொண்டே தனக்கெதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன் தினம் முன்னிலையாகி சுமார் 5 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர் – பக்கம் 04 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறை, தொட்ட குறை மாதிரி சில விடயங்கள் உண்டல்லவா? அதனால் தொடர்கிறேன். வாசகர்கள் பொறுத்துக் கொள்வார்களாக!

நேற்று இவ்விடயத்தில் 'காலைக்கதிர் சுமந்திரனின் ஊதுகுழல்' என்று ரெலோவின் தலைவர், செல்வம் தமது கட்சி ஆதரவாளர்களிடம் கூறியிருந்தார் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? அது தொடர்பில் காலையில் செல்வம் தொடர்பு கொண்டார். உரிமையுடன் பேசினார்.

எந்த ஊடகத்தையும் தாம் அப்படி மோசமாக விமர்சிக்கவில்லை என்றும் அவ்வாறு தாம் கூறியமையை நிரூபிக்க முடியுமா என்றும் சவால் விடுக்கும் பாணியில் – ஆனால் உரிமை நெருக்கத்துடன் – பேசினார் செல்வம்.

செய்தி மூலங்களைக் காட்டிக் கொடுப்பது ஊடக தர்மத்தில் முதல் குற்றம். ஆகையால் அவர் சவாலை ஏற்க முடியாது என்று தெரிவித்தேன். எனக்கும் வேறு வழி இருக்கவில்லை.

இனி அடுத்த விடயத்துக்கு வருகிறேன். இதுவும் சுமந்திரன் சம்பந்தமானதே.

*"தென்னையில் தேள் கொட்டியதற்கு பனையில் நெறி கட்டியமை"* மாதிரியான தகவல் இது.

பிரபல சிங்கள அரசியல் ஊடகவியலாளரான எனது நண்பர் ஒருவர் நேற்று மாலை தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ – சுமந்திரன் இடையில் சில தினங்களுக்கு முன்னர் நடந்த சந்திப்புக் குறித்து என்னிடம் நோண்டினார்.

*"அது பழைய சமாச்சாரம், ஆறிய கஞ்சி. பழங்கஞ்சி!"* – என்றேன் நான்.

*"இல்லை, இல்லை அதில் விடயம் இருக்கின்றது"* – என்றார் அவர்.

இரண்டு முக்கிய தரப்புகள் அந்த சந்திப்புத் தொடர்பான விடயங்களை துல்லியமாக அறிவதில் ஆவலாயுள்ளன என்றார் அவர்.

அதனால்தான் அவர் மூலமாக எனக்குத் தெரிந்த விடயங்களைக் கறப்பதற்கு அந்த முயற்சி என்பதைப் புரிந்து கொண்டேன்.

முதலாவது தரப்பு – ஜனாதிபதி கோட்டாபாயவைக் சூழவுள்ள வட்டாரம். புதிய அரசமைப்பு உருவாக்கம், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை தொடர்பில் மஹிந்தர், சுமந்திரன் இருவரும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதை அறிவதில் அந்த வட்டாரங்கள் மிக மிக ஆவலாக இருந்தனவாம். அந்தத் தாற்பரியம் புரிந்து கொள்ளத் தக்கதே.

அடுத்த தரப்பு – ஐ.தே.க. வட்டாரங்கள். அதுவும் குறிப்பாக ரணிலுக்கு மிக நெருக்கமான தரப்புகள்.

அந்தத் தரப்புகள் ஏன் மஹிந்த – சுமந்திரன் சந்திப்புக் குறித்தும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் பற்றியும் தீவிர கரிசனை காட்ட வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை. நண்பரிடம் கேட்டேன். அவர் விளக்கினார்.

*"சஜித் அணியுடன் சேராமல் ஐ.தே. கட்சி இத்தேர்தலில் தனித்து நிற்பதற்கு காரணம் உண்டு. சு.க. உட்பட பிற கட்சிகள் எல்லாம் மொட்டு அணியுடன் ஒரு பட்டியலில் போட்டியிடுகின்றன. சஜித் அணியை விட்டுப் பிரிந்து நிற்கும் ஐ.தே.க. பிரபலங்கள் தாங்கள் பத்து முதல் இருபது ஆசனங்களையாவது வெல்வார்கள் என்று எதிர்பார்க்கின்றார்கள். முக்கிய பிரபலங்கள் எம்.பியாகி விட முடியும் என்று நம்புகின்றார்கள். அப்படி வென்றால் கோட்டா – மஹிந்தவுடன் பேசி, மொட்டுக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசு அமைக்கலாம் என்பது ரணில் உட்பட ஐ.தே.க. பிரபலங்களின் நம்பிக்கை. அப்படி தேசிய அரசு அமைப்பதற்கு ஆளும் கட்சிக்கு இன்னொரு பிரதான கட்சி தேவை. ஜனாதிபதியும் ஆளும் தரப்பும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றால் 'தேசிய அரசு' அங்கீகாரத்தை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். அப்படிச் செய்தால் பதவி ஏற்கக் கூடிய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். அதற்காக கோட்டா – மஹிந்த தரப்பு தங்களைத் தேசிய அரசுத் திட்டத்துக்குள் எப்படியும் உள்வாங்கும் என ஐ.தே.கட்சி நினைக்கிறது. இந்தச் சிந்தனை ஐ.தே.கவுக்குள் இருப்பது தெரிந்துதான் தாங்கள் தேசிய அரசில் இணைய மாட்டோம் என்று சஜித் அண்மையில் பகிரங்கமாக அறிவித்திருந்தார் என்பது நினைவு கொள்ளத்தக்கது. தேசிய அரசு ஏற்பாடு மூலம் புதிய அரசில் இணைந்து கொண்டால் இரண்டு லாபங்கள். ஒன்று – அடுத்த அரசின் ஆட்சிக் காலம் முழுவதும் எதிரணியில் அமராது அமைச்சுப் பதவி, பவிசுகளுடன் இருக்கலாம். அடுத்தது – அரசுத் தரப்பில் அமைச்சுப் பதவியில் இருந்தால் பழைய பிணைமுறி வழக்குகள், ஊழல் குற்றச்சாட்டு வழக்குள் போன்றவற்றில் சிக்காமல் இருப்பதை உறுதி செய்யலாம்.*

*"ஐ.தே.கவின் இந்தத் திட்டத்துக்கு – எதிர்பார்ப்புக்கு – சுமந்திரன், மஹிந்த சந்திப்பு உலை வைத்துவிடுமோ என்று அஞ்சுகின்றனவாம் ஐ.தே.க. பிரபலங்கள்.*

*"தேர்தலின் பின்னரான புதிய அரசுடன் கூட்டமைப்பினர் எவ்வளவுதான் நெருங்கி வந்தாலும் அவர்கள் அரசில் அமைச்சர் பதவிகள் கேட்கவும் மாட்டார்கள். கொடுத்தால் வாங்கவும் மாட்டார்கள்.*

*"அதிக பட்சம் காணிகள் விடுவிப்பு, கைதிகள் விடுவிப்பு, காணாமல் போனோருக்கு நஷ்டஈடு என்பன போன்றவைதான் அவர்களின் உடனடி எதிர்பார்ப்பாக முன்வைக்கப்படும். ஐ.தே.க. தரப்பினர் கேட்கும் அமைச்சுப் பதவிகளை விட கூட்டமைப்பு எதிர்பார்க்கும் இவ்விடயங்களை ஒப்பேற்றுவது கோட்டா – மஹிந்த தரப்புக்கு அவ்வளவு பெரிய விடயமாக இருக்கப் போவதில்லை. ஆகவே ஐ.தே.க. வசம் வரக்கூடிய பத்துப் பதினைந்து ஆசனங்களுக்குப் பதிலாக அரசுக்கு வெளியில் இருந்து தமிழ்க் கூட்டமைப்பு தரக்கூடிய ஆதரவைப் பெற்றுக் கொள்வதே புதிய அரசில் மொட்டுத் தரப்பினருக்கு சாதகமானதும் வசதியானதும் என்று மொட்டுத் தலைமை கருதும் என ஐ.தே.கவினர் அஞ்சுகின்றனர்.*

*"மஹிந்த – சுமந்திரன் சந்திப்பும், நெருக்கமான உறவாடலும் அத்தகைய புரிந்துணர்வு நிலைக்கு உயர்ந்து விட்டால் புதிய அரசில் இணையும் தங்களின் கனவு கானல் நீராகி விடும் என்ற பெருங் கவலை அவர்களுக்கு. அதனால்தான் இந்தச் சந்திப்பின் விவரங்களை அறிவதில் அதிக முனைப்புக் காட்டுகின்றனர் அவர்கள்"* – என்றார் என் ஊடக நண்பர்.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்பது புரிந்தது.

★ ★ ★

சுமந்திரனின் ஜுனியர் சட்டத்தரணி பேசிய ஒரு விடயம் குறித்து இன்று பிரஸ்தாபிப்பேன் என்று குறிப்பிட்டேன். நாளைக்கும் எழுதுவதற்கு விடயம் தேவை அல்லவா? அதனை நாளைக்குப் பார்ப்போமா வாசகர்களே...!

–மின்னல்–

## சர்வதேச நிதியுதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்து வெளியிட்ட அவர், உலக வங்கியின் மூலமாக 12.6 கோடி அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அந்த நிதித்தொகை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாம் எமது இருப்பில் இருந்து செலவு செய்கின்றோம். எனினும் இன்னமும் சர்வதேச நிதி உதவி எமக்குக் கிடைக்கவில்லை.

அதேபோல் சர்வதேச சந்தையில் கனிய எண்ணெய் விலை குறைவடைந்துள்ளதால் இலங்கையில் எண்ணெய் விலையை குறைக்க முடியாது. அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் திட்டமொன்று உள்ளது.

உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்தால் அதன் இலாபம் மத்திய வங்கியில் எண்ணெய் குறித்த கணக்குகளில் சேரும். இவ்வாறு நாம் 20 கோடி பெற்றுக்கொள்ள நினைக்கிறோம்.

எனினும் பெற்றோலியக்கூட்டுத்தாபனம் கடனில் உள்ள காரணத்தினால் இந்த நிதியை கடன்களை நிரப்ப பயன்படுத்வோம். எதிர்காலத்தில் இதன் பலன்களை மக்கள் அனுபவிக்க முடியும்.

இவ்வாறான திட்டமேஎம்மிடம் உள்ளது. விலை நிர்ணயம் ஒன்றினை உறுதியாக கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறு கடைப்படித்தால் நெருக்கடிகள் ஏற்படும் வேலைகளிலும் மக்களுக்கு நெருக்கடிகளை வழங்காது கையாள முடியும்– என்றார்.

## மட்டு.கரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒந்தாச்சிமடம் போன்ற இடங்களில் உள்ள கிணறுகளே நேற்று மாலை திடீரென வற்றின என்று தெரிவிக்கப்பட்டது.

சில இடங்களில் கிணறுகள் வற்றி அடி மண் நீரின்றித் தெரிந்ததாகக் கூறப்பட்டது.

இதற்கான காரணம் தெரியவில்லை.

இதேவேளை மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் உள்ள கிணறு கடந்த புதன்கிழமை பொங்கி வழிந்ததாகச் செய்திகள் வெளியானமை தெரிந்ததே. (உ)

## யாழ்.பல்கலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ பீடத்தின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

குமுதினிப் படகில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாகவும் , முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் நினைவாகவும் நேற்றுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை நேற்றைய மாலை 6 மணி முதல் பல்கலைக்கழகப் பிரதான வாயிலில் கோப்பாய் பொலிஸார் சுமார் 20 பேர் வரை துப்பாக்கிகளுடன், நின்றிருந்தனர்.

நேற்று முன் தினம் மாணவர்களின் அஞ்சலியை குழப்பும் நோக்குடன் கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார், பல்கலைகழக மாணவர்கள் நுழையும் வாயிலில் ஒரு மணி நேரம் காவல் இருந்தபோது , மாணவர்கள் பண்பாட்டு வாயிலில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர். அஞ்சலி நிகழ்வு முடிவடைந்த பின்னரே சுடரேற்றியதை அறிந்து அவ்விடத்துக்குப் பொலிஸார் விரைந்து அஞ்சலி செலுத்தியவர்களின் விவரங்களைச் சேகரித்ததுடன் ஒளிப்படங்களையும் எடுத்துக்கொண்டனர்.

## 935 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கை 935 ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே 925 பேர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் தற்போது மேலும் 10 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 449 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை கொரோனா தொற்றால் 9 மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பி.சி.ஆர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்சா கூறினார்.

நாடு பொருளாதார நடவடிக்கைகளுக்காக மீளத் திறக்கப்பட்டுள்ளபோதிலும் சோதனைகளை தொடர்வது அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய தொற்று ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிரமான சோதனைகள் அவசியம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொவிட் – 19 தொற்றை தடுப்பதில் சர்வதேச ரீதியில் பெற்ற இந்த வெற்றியைத் தொடர்ந்து நாம் தக்கவைத்துக்கொள்வது எமது கடமையாகும். எனவே எதிர்வரும் காலங்களில் நாட்டு மக்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு – 12 பண்டாரநாயக்க மாவத்தை வாழைத்தோட்டம் மற்றும் ஜா – எல, சுதுவெல்ல ஆகிய பகுதிகள் நேற்று காலை முதல் திறக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், அதற்கமைய நாட்டில் தனிமைப்படுத்தப்பட்ட அனைத்துப் பகுதிகளும் திறக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

சுகாதார தரப்பினரின் ஆலோசனை கிடைக்கும் வரை சுய தனிமைச் செயற்பாட்டைத் தொடர்ந்தும் பேணுமாறு இராணுவத்தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

## நாடு முழுவதிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோக்கியும் செல்லும் வாய்ப்பு காணப்படுவதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் மேல், சப்ரகமுவ, தென், மத்திய மாகாணங்களின் ஒரு சில இடங்களில் 150 மில்லி மீற்றர் வரை கடும் மழை பெய்யும் வாய்ப்பு காணப்படுகின்றது.'

அத்துடன் மன்னாரிலிருந்து கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்கரையை அண்டிய பகுதிகளில் கடல் அலையின் உயரம் 2 – 2.5 மீற்றர் வரை அதிகரிக்கும் வாய்ப்பு காணப்படுவதோடு, இதன் காரணமாக, அலைகள் கரையை நோக்கி அதிக தூரம் வர வாய்ப்பு காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான வானிலை இன்றிலிருந்து அடுத்த சில நாள்களுக்கு மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக, வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்களுக்கு முக்கிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றமையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் சகலரையும் அழைத்து தனக்கு கீழ் உள்ள அதிகாரங்கள் அனைத்தையும் பதில் முதல்வராக என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

மார்ச் மாதம் 17ஆம் திகதி நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் முதல்வர் இ.ஆனல்ட் ஒப்பமிட்ட பின்பும் தன் அதிகாரங்களைக் கையளிக்காது அவர் இருந்தார்.

அதாவது அதில் சொல்லப்பட்ட விடயம் என்னவென்றால் முதல்வர் முதல்வராகவே இருந்துகொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடலாம். அந்தச் சட்டதிட்டங்கள் எங்களுக்கும் தெரியும். அவர் செய்ததும் சரியானது.

இப்படியாகத் தொடர்ச்சியாக முதல்வர் செயற்படும்போது தேர்தல் திணைக்களத்தினால் மூன்று கடிதங்கள் மாநகர சபைக்கு வந்துள்ளன. உடனடியாக நீங்கள் விடுமுறையைப் பெற்று உங்கள் கடமைகளை ஒப்படைத்து இந்தப் பணியை ஆற்ற உதவி செய்யுமாறு அதில் கேட்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக இரண்டு மாதங்களுக்கு பின்பு முதல்வர் பொறுப்புக்களை ஒப்படைத்துள்ளார். இந்த இடைப்பட்ட காலத்தில் முதல்வர் முதல்வராக செயற்பட்டமை உண்மை. நான் பிரதி முதல்வராகத்தான் செயற்பட்டிருந்தேன்.

ஆனால் முதல்வர் எந்த விடயங்களைச் செய்ய வேண்டுமோ அந்த விடயங்களைச் செய்துவிட்டார். தனது வாகனங்கள் உள்ளிட்ட சகலதையும் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தார்.

அதற்கு பின்பு உறுப்பினர்கள் அடுத்து நீங்கள் தானே, என்ன செய்யப் போகின்றீர்கள் என என்னைக் கேட்பார்கள். ஆனால் முதல்வர் முதல்வராக இருந்த காரணத்தினால் என்னால் சில செயற்பாடுகளைச் செய்வதற்குப் பல தடைகள் இருந்தன.

உதாரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தபோது மக்களுக்குச் செய்யவேண்டிய தண்ணீர் பிரச்சினை உள்ளிட்ட சகல ஏற்பாடுகளையும் உன்னிப்பாகப் பார்த்துச் செய்திருந்தேன்.

முதன் முதலில் நிவாரணப் பணியை மாநகரத்தில் ஆரம்பித்து வைத்தவன் நான்தான். இந்த நிவாரணப் பணிகளை முன்னெடுக்கும்போது பொலிஸாருக்குத் தெரியும் நான் பிரதி முதல்வர் என்று. ஆனால் சிறப்பு அதிரடிப்படையினருக்கோ, இராணுவத்திற்கோ தெரியாது.

நான் என்னுடைய மோட்டார் சைக்கிளில் செல்லும்போது எனக்கு பல தடைகள் ஏற்பட்டன. பெரும் சிரமத்தின் மத்தியில் தான் நான் இவ் விடயங்களைச் செய்து முடித்தேன்.

இந்த விடயம் எனக்கு மனத்தாக்கத்தை ஏற்படுத்தியது, 23 மாநகர சபைகளில் 22 மாநகர சபைகளில் பிரதி முதல்வருக்குரிய வசதி, வாய்ப்புகள் செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் சட்டச் சிக்கல்கள் காரணமாக செய்ய முடியவில்லை. அது ஒரு துரதிஷ்டம் – என்றார்.

# யாழில் டெங்கு எச்சரிக்கை



யாழ்ப்பாணம், மே 16

யாழில் டெங்கு நோயின் தாக்கம் அதிக ரித்து வருவதாகவும், அது தொடர்பில் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று செய்தி யாளர்களைச் சந்தித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –


கடந்த சில தினங்களாக மழையுடன் கூடிய கால நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் சங்கானை, உரும்பிராய் உள்ளிட்ட சில பகுதிகளில் இருந்து டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளான நோயாளிகள் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத் தும் முகமாக மக்கள் தமது வீட்டு சூழல்களை துப்பரவாக டெங்கு நுளம்பு பரவ கூடிய சூழல் இல்லாமல் பராமரிக்க வேண்டும்.

அதன் ஊடாகவே டெங்கு நோயில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் என் றார்.

## காணிக்குள் ஷெல்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிர தேசசெயலக பிரிவுக் குட்பட்ட சிவநகர் பகுதியில் காணியை துப்புரவு செய்த போது ஆர்.பி.ஜி. ஷெல் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது

சிவநகர் பகுதியை சேர்ந்தவர் தனது காணியை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது காணிக்குள் ஷெல் இருப்பதை அவதானித்துள்ளார். அத்துடன், அது தொடர்பில் புதுகுடியிருப்பு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயன்றவர் கைது!

கிளிநொச்சி, மே 16

கிளிநொச்சியில், பதினம வயது சிறுமி ஒருவரை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற இளைஞன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் பதின்ம வயதுடைய சிறுமி ஒருவரைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்றமை தொடர்பில் கிளிநொச்சி பொலிஸா ரால் ஒருவர் கைது செய்யப்பட்டதார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் மேற்படி சந்தேக நபரை நேற்று முன்தினம் பிற்ப கல் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் ரீ.சரவணராஜா முன்னிலையில் ஆயர்படுத்தியதையடுத்து மேற்படி சந்தேக நபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மதுபோதையில் கார் செலுத்தியவர் விபத்து

### யாழ்.நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 16

மதுபோதையில் காரினை செலுத்தி வந்த நபர் வீதியோரமாக நிறுத்தி வைக் கப்பட்டிருந்த வாகனங்களுடன் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வழி யாக நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

நிறை மதுபோதையில் காரைச் செலுத்தி வந்த நபர் ஒருவர், வெலிங்டன் சந்திக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சைக்கிள்கள் மற்றும் மோட்டர் சைக்கிள்கள் என்பவற்றுடன் மோதி விபத்து உள்ளாகி யுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். மதுபோதையில் காரைச் செலுத்தியவரைக் கைது செய்தமையுடன் காரையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்றுள்ளனர்.

நீண்ட காலத்திற்கு பின்னர் நேற்றைய தினம் மதுபான விற்பனை நிலையங் களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டத னையடுத்து, மதுபோதையில் விபத்துக் குள்ளாகும் சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

## பருத்தித்துறையில் அஞ்சலி!





யாழ்ப்பாணம், மே. 16

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் இரண் டாம் நாளான நேற்று பருத்தித்துறை முனை கடற்கரைப் பகுதியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

## மாத்தளை,காலி மாவட்டங்களில் மண்சரிவு அபாய எச்சரிக்கை

மாத்தளை, மே 16

மாத்தளை மற்றும் காலி மாவட்டங்களில் எதி ர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு அமுலாகும் வகையில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

அதற்கமைய, மாத்தளை மாவட்டத்தின் உக்கு வலை பிரதேச செயலாளர் பிரிவுக்கு பூரண மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது.

அத்துடன்,காலி மாவட்டத்தின், பத்தேகம, அக்மீ மன, எல்பிட்டிய, நியாகம, போப்பே ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண் சரிவு அபாய் எச்ச ரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வவுனியா விபத்தில் ஒருவர் கவலைக்கிடம்

வவுனியா, மே 16

வவுனியா, ரயில் நிலைய வீதியில் நேற்றுப் பிற் பகல் இடம்பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் படு காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

குருமன்காடு பகுதியில் இருந்து ரயில் நிலைய வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்து கொண்டிருந்த பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு வரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத் தியசாலையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப் பட்டனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிட மாக இருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரி விக்கின்றன.

இந்த விபத்து தொடர்பாக வவுனியா போக்குவரத் துப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

தோட்டக்காணி தேவை
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை.
இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

புழுக்கொடியல் விற்பனைக்கு.
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு.
தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422

வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை.
முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com




# அரசியல் செல்நெறியை தீர்மானிக்கும் வழக்குகள்

**இலங்கையின் எதிர்கால அரசியல் செல்நெறி எந்தத் திசையில், எப்படி நகரப் போகின்றது என்பது தொடர்பில் முடிவு எடுக்கும் தீர்மானகரமான காலமாக நாளை பிறக்கும் புதிய வாரம் அமையப் போகின்றது.**

**இலங்கையின் அரசியல் போக்கின் தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடிய முக்கிய வழக்குகள் நாட்டின் உயர்நீதி மன்றத்தில் நாளை மறுதினமும், அடுத்த நாளும் (திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும்) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட விருக்கின்றன.**

**ஜனாதிபதியின் சார்பில் சட்டமா அதிபரைப் பெயர் குறிப்பிட்டுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஏழுக்கும் அதிகமான அடிப்படை உரிமை மீறல் மனுக்களே நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப் படவிருக்கின்றன.**

**நாட்டின் பிரபல அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோர் மற்றும் சிவில் பிரமுகர்கள் சார்பில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

**கடந்த மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அரசமைப்பு ஏற்பாடுகளின்படி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். ஆனால் ஜூன் 2 ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.**

**அதன் காரணமாக நாடாளுமன்றத்தைக் கலைத்துப் புதிய பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடுமாறு ஜனாதிபதி வழங்கிய உத்தரவு செல்லுபடியற்றதாகி விட்டது என்பது மேற்படி வழக்குகளின் பிரதான பேசுபொருளாக அமைந்துள்ளது. இதன் காரணமாக –**

**நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் பிரகடனத்தை வெற்றும் வறிதாகவும் அறிவிக்கும் படியும் –**

**பொதுத் தேர்தலை புதிய திகதியில் – ஜூன் 20ஆம் திகதி நடத்தும் விதத்தில் – தேர்தல் ஆணையம் விடுத்த வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக அறிவிக்கும்படி வேண்டியும் –**

**இந்த மனுக்களில் உயர்நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்கப் பட்டுள்ளது.**

**இந்த மனுக்களில் ஒன்று கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் இந்த மனுக்களை ஐந்து நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன்னால் விசாரிப்பதற்கு பிரதம நீதியரசர் உத்தரவு வழங்கியிருக்கின்றார்.**

**இந்த வழக்கில் இடைக்கால உத்தரவாக பொதுத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடைக்காலத் தடை விதிக்கும்படி கோரப் பட்டிருக்கின்றது.**

**ஒவ்வொரு மனுதாரர் சார்பிலும் பல்வேறு சிரேஷ்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகின்றமையால் திங்களும் , செவ்வாயும் நீண்ட வாதப் பிரதிவாதங்கள் மணிக் கணக்கில் தொடர்வதற்கு வாய்ப்புண்டு.**

**முதலில் இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பதை நீதிமன்றம் பரிசீலிக்கும். விசாரணைக்கு ஏற்று எதிர் மனுதாரர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிப்பதா என்று அது தீர்மானிக்கும். நீதிமன்றம், விசாரணைக்கு அவற்றை ஏற்குமாயின் மட்டுமே அடுத்து இடைக்காலத் தடை உத்தரவு வழங்குவதா என்பது குறித்துப் பரிசீலிக்கும் எனக் கூறப்பட்டது.**

**இந்தப் பூர்வாங்க விசாரணைக்கு திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் சில சமயங்களில் அது தாண்டியும் இம்மனுக்கள் மீதான பூர்வாங்க விசாரணை தொடர்வதற்கும் வாய்ப்புண்டு.**

**நாட்டுக்கு அவசியமான, அவசரமாகத் தீர்மானிக்க வேண்டிய விவகாரம் இது என்பதால், விசாரணைகள் நீண்டு சென்றாலும் நீண்ட நாள்களுக்கு விடயத்தை ஒத்திப்போடாமல் அடுத்தடுத்த நாள்களிலேயே வழக்கு விசாரணையை முடிவுக்குக் கொண்டு வந்து ஒரு தீர்மானத்தை எட்டுவதில் உயர் நீதிமன்றம் மிகுந்த கரிசனையாக இருக்கும் என்று நம்பமுடியும்.**

**மனுதாரர்களில் பிரதான கோரிக்கையில் ஒன்றான நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவு வெற்றும் வறிதுமானது என அறிவிக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை உயர்நீதிமன்றம் ஏற்குமாயின் இலங்கையின் அரசியல் செல்நெறியில் அது ஒரு புதிய பாதையைத் திறந்துவிடும் என்பது நிச்சயம்.**

**தேர்தல் நடவடிக்கைகள் – வேட்பு மனு ஏற்றுக் கொள்வதில் இருந்து புதிதாக ஆரம்பிக்கப்படும் கட்டாயமும் அதனால் உருவாகும்.**

# இன்றியமையாச் சூழலைக் காரணம் காட்டி அரசமைப்பை மீறிச் செயற்படுவதற்கு இடமுண்டா?

நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் பிற்போட்டமை, நாடாளுமன்றத்தைக் கலைத்தமை, புதிய நாடாளுமன்றத்தை உரிய கால வரையறைக்குள் கூட்டமுடியாமை போன்ற விடயங்கள் அரசமைப்பு மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகளை மீறும் செயல்களாக அமையுமா? இவையே இன்று அரசியலில் பேசப்படும் முக்கிய விடயங்களாக அமைந்துள்ளமையுடன், இவை தொடர்பான சட்டவியாக்கியானம் கோரி இன்று உயர்நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டும் உள்ளன.

உதாரணமாக நாடாளுமன்றத் தேர்தல் சட்டம் பிரிவு 24(3) இற்கு அமைவாக எதிர்பாராத சூழல்கள் அல்லது அவசரநிலை ஏற்படும் கட்டத்தில் ஒரு தேர்தல் மாவட்டத்திற்குரிய தேர்தலை அவ்வாறான அறிவிப்பு வெளியிடப்படும் திகதியிலிருந்து 14 நாள்களுக்கு மேல் ஏதேனும் ஒரு திகதியில் தேர்தலை நடத்துவதாக அறிவிக்கலாம். அதன் அடிப்படையில்தான் ஏப்பிரல் 25 ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தல் ஜூன் 20ஆம் திகதிக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் பிற்போடப்பட்டுள்ளது. இங்கு இரண்டு வகையான சட்டமீறல்கள் இடம்பெற்றுள்ளன என சட்ட ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

ஒன்று – ஏதேனும் ஓர் தேர்தல் மாவட்டத்தில் அசாதாரண சூழல் அல்லது அவசரகால நிலமை என்றுதான் சட்ட ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தும், தேர்தல் ஆணைக்குழு இச்சட்டப்பிரிவின் அடிப்படையில் நாட்டிற்கான முழுத் தேர்தலையும் பிற்போட்டது ஏற்புடையதாகுமா?

மற்றையது, புதிய தேர்தல் திகதியை குறிப்பிடும் கால எல்லை அச்சட்ட ஏற்பாட்டில் குறிப்பிடப்படாமல் இருந்தும், அரசமைப்பின் பிரிவு 70(5)(அ) இன் பிரகாரம் புதிய நாடாளுமன்றம் அது கலைக்கப்பட்டு மூன்று மாதங்களிற்குள் ஜனாதிபதியினால் கூட்டப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான திகதி ஜூன் மாதம் 2ஆம் திகதிக்கு முன் அமைய வேண்டும். இவ்வாறாக அரசமைப்பின் ஏற்பாடுகள் இருக்கும் போது, வெறுமனே தேர்தல் சட்டத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தேர்தல் ஆணைக்குழு ஜூன் 2ஆம் திகதிக்கு பிந்திய ஒரு திகதியை புதிய தேர்தல் திகதியை அறிவித்தமை அரசியல்சட்ட மீறல் செயற்பாடாக அமையுமா?

ஜனாதிபதி மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்த பிரகடனத்தை வெளியிடும் போது மே மாதம் 14ஆம் திகதியினை புதிய நாடாளுமன்றம் கூடும் திகதியாக அறிவித்திருந்தார். ஆனால் இன்று தேர்தல் ஆணைக்குழு ஜூன் 20ஆம் திகதியைப் புதிய தேர்தலுக்கான திகதியாக அறிவித்திருக்கும் சூழலில், புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டும் திகதியை ஜூன் 20இற்கு பிந்திய ஒரு திகதியில் அறிவிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில ஜனாதிபதி உள்ளார். அவ்வாறு அவர் அறிவிக்கும் பட்சத்தில் அது அரசமைப்பு மீறலாக அமையுமா?

இவ்வாறான ஒரு சூழலில் இன்றியமையாச் சூழலுக்கு அமைய செயற்படுதல் என்ற கோட்பாட்டை (Doctrine of Necessity) பிரயோகிக்கலாமா என்பது ஆராயப்பட வேண்டியதொன்று. முதலில் இன்றியமையாச் சூழலுக்கு அமைய செயற்படுதல் என்ற கோட்பாடு என்ன என்பதனை சற்று விரிவாகப் பார்ப்போம். அரசு அல்லது அரசுசார் செயற்பாட்டாளர்கள், ஓர் அவசர நிலைமை அல்லது எதிர்பாராத சூழலின் போது வேறு சட்ட செயற்பாடுகளுக்கு அமைய செயற்பட முடியாத நிலையில், அரசமைப்பையும் மீறிச் செயற்படலாம் என்பதே அக்கோட்பாடாகும்.

இதற்கு உதாரணமாகக் கூறக் கூடியது 2010 ஆம் ஆண்டு நைஜீரியா ஜனாதிபதி இரண்டு மாதங்களிற்கும் மேலாக சவூதி அரேபியாவில் சுகயீனம் காரணமாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த சூழலில், நைஜீரிய நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் அரச அதிபரின் முழு அதிகாரங்களையும் கொண்டவராக ஒரு பதில் அரச தலைவரைத் தேர்ந்தெடுத்தது. இது நைஜீரிய அரசமைப்பிற்கு முற்றிலும் முரண்பாடான செயல். நைஜீரிய அரசமைப்பின் படி பதில் ஜனாதிபதியை ஜனாதிபதி மட்டுமே நியமிக்க முடியும். இங்குதான் இன்றியமையாச்சூழலுக்கு அமைய செயற்படுதல் என்ற கோட்பாடு பிரயோகப்படுத்தப்படுகின்றது.

இன்னுமொரு உதாரணத்தைப் பார்ப்போமாயின், 1954 ஒக்டோபர் மாதம் பாகிஸ்தானுடைய ஆளுநர் குலாம் முகமட் சட்டவாக்க சபையினைக் கலைத்தமை தொடர்பான வழக்கில் பிரதம நீதியரசர் முனிர் சாதாரண சூழலில் சட்ட பூர்வமற்றதாக கருதப்படும் விடயங்கள் இன்றியமையாச் சூழலில் சட்ட பூர்வமாக்கப்படுகின்றன என்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஆளுனரின் செயற்பாடு அரசமைப்பை மீறவேண்டிய ஓர் இன்றியமையாச்சூழலுக்கு இட்டுச்சென்றுள்ளது ஆகை யினால் அது நியாயபூர்வமானது, எனத் தீர்ப்பளித்துள்ளார்.

'இன்றியமையாச்சூழலுக்கு அமைய செயற்படுதல், என்ற கோட்பாடு அரசமைப்பு விவகாரங்களுக்கு மட்டுமல்ல சாதாரண குற்றவியல் சட்டப் பிரயோகங்களின் போதும் ஏற்புடைய தக்கதான ஒன்று. கனடாவில், தவிர்க்க முடியாத ஆபத்து நெருங்கும் நேரத்தில் (Urgent situation of imminent peril or danger), நியாயபூர்வ சட்ட மாற்றுவழி இல்லாத சூழலில் (No reasonable legal alternative), தீங்கை விளைவிப்பதற்கும் அதைத் தவிர்ப்பதற்குமான விகிதாசாரத்தன்மை (Proportio - nality between harm inflicted and harm avoided) போன்ற இன்றியமையாச்சூழல் காரணிகளின் அடிப்படையில் குற்றச் செயற்பாடுகளில் இருந்து தண்டனை பெறுவதற்கான விதிவிலக்கினைக் கோரலாம்.

அதேபோன்று ஐக்கிய இராட்சியத்தில் குடியுரிமை பெறுபவர்கள் சித்தியடைய வேண்டிய Life in UK என்ற பாடவிதானத்தில் இன்றியமையாச்சூழலில் சட்டத்திற்கு முரணாகச் செயற்படலாம் எனவும், ஆனால் அவ்வாறான செயற்பாடு வேறு மாற்றுவழியில்லாத இன்றியமையாச் சூழலில்தான் இடம்பெற்றதாக நிருபிக்கப்படல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதலால் இன்றியமையாச் சூழலுக்கமைய சட்ட ஏற்பாடுகளிலிருந்து விலகிச் செயல்ப்படுதல் என்பது ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவம். ஆனால் அதன் பிரயோகமானது வேறு மாற்றுச் சட்ட ஏற்பாடுகள் எவையும் நடைமுறைப்படுத்தப்பட முடியாத ஒரு சூழலில் தான் ஏற்புடையதாக அமையும்.

மேலே குறிப்பிட்டதனைப் போன்று இன்று இலங்கையில் நடைபெற்ற மற்றும் நடைபெறக் கூடிய அரசமைப்பு மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள், மாற்றுச் சட்ட ஏற்பாடுகள் எதுவும் செயற்படுத்த முடியாத இன்றியமையாச் சூழலின்தான் பிரயோகப்படுத்தப்படுகின்றதா என்பதே இன்று உயர்நீதிமன்றத்தினால் தீர்வு காணப்பட வேண்டிய முக்கிய விடயமாக அமைகின்றது.

சி.தவராஜா
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்,
வடக்கு மாகாண சபை.

## தேர்தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது ராஜபக்ஷவின் வழமையான பாணி. முன்னைய ராஜபக்ஷ ஆட்சியின்போது என்னை சி.ஐ.டியினர் மூன்று முறை விசாரணை செய்திருந்தனர்.

அவர்கள் என்னை உள ரீதியாக அழிப்பதற்கு முயன்றனர். நீங்கள் தவறான நபருடன் மோதுகின்றீர்கள், நீங்கள் எவ்வளவுக்கு தாக்குதலை மேற்கொள்கின்றீர்களோ அவ்வளவுக்கு நான் வலிமையானவனாக மாறுவேன்.

வடக்கு மாகாணத்திலிருந்து பல மைல் தொலைவில் உள்ள வாக்குசாவடிகளுக்கு வாக்களிக்கச் செல்ல வேண்டியவர்களுக்காக கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது வடபகுதி புனர்வாழ்வு திணைக்களம் குறிப்பிட்ட நிதியை ஒதுக்கியது.

அவர்கள் விடுதலைப்புலிகளினால் பாதிக்கப்பட்டவர்கள். 1990இல் யாழ்ப்பாணத்திலிருந்தும் ஏனைய பகுதிகளில் இருந்தும் வெளியேற்றப்பட்டவர்கள். முன்னைய அரசுகள் போல நாங்களும் பொறுப்புணர்வுடன் நடந்து கொண்டு அவர்களுக்கு வாக்களிப்பதற்காக உள்ள உரிமையை உறுதி செய்தோம்.

நாங்கள் விசேடமான குழுவைச் சேர்ந்தவர்கள் குறித்து குறிப்பிடுகின்றோம். அவர்கள் 30 வருடங்களுக்கு மேலாக துயரத்தை அனுபவிப்பவர்கள். கடந்த 30 வருடங்களாக எந்த அரசும் அவர்களுக்காக எதனையும் செய்யாத மக்கள். இதற்கு நாங்கள் அனைவரும் பொறுப்பேற்கவேண்டும்.

அவர்களது வாக்குரிமை பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாக்குரிமை உறுதிப்படுத்தப்படுவதற்கு உதவியமை குறித்து நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன். இது குறித்து நான் பெருமைப்படுகின்றேன் என சி.ஐ.டியினருக்கு நான் தெரிவித்தேன் – என்றார்.

# டோக்கியோ ஒலிம்பிக் தள்ளிப்போனதால் 111 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது




டோக்கியோ ஒலிம்பிக் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் (இந்திய நாணயப் பெறு மதிப்படி) கூடுதல் செலவை எதிர்நோக்கி இருக்கிறோம் என சர்வதேச ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

ஜப்பான் தலைநகரான டோக்கியோ நகரில் ஜூலை - ஒகஸ்ட் மாதங்களில் ஒலிம்பிக் போட்டி நடைபெற இருந்து. ஆனால் கொரோனா வைரஸ் தொற்று காரண மாக போட்டி அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள் ளது. அடுத்த வருடம் ஜூலை 23ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டி நடைபெற இருக்கின்றது.

பொதுவாக போட்டிக்கான செலவை போட்டியை நடத்தும் நாடு, அந்த நகர நிர்வாகம் மற்றும் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி ஏற்றுக்கொள்ளும். ஜப்பான் இந்த ஒலிம்பிக் போட்டிக்காக சுமார் 12.6 பில்லியன் டொலர் செலவழித்துள்ளது.

தற்போது ஒரு வருடத்திற்குப் போட்டி தள்ளி வைக்கப்பட்டுள்ளதால் கூடுதலாக 800 மில்லியன் டொலர் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பணத்தை போட்டி அமைப்பாளர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் குழுவின் தலைவர் தாமஸ் பேச் தெரிவித்துள்ளார்.

800 மில்லியன் டொலரில் 650 மில்லியன் டொலரை சர்வதேச ஒலிம்பிக் குழு ஏற்றுக் கொள்ளும் என்றும், 150 மில்லியன் டொலரைச் சர்வதேச பெடரேசன்கள், தேசிய ஒலிம்பிக் கமிட்டிகள் ஆகியவற்றிடம் இருந்து வாங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தோமஸ் பேச் கூறுகையில் "போட்டியில் பங்கேற்கும் அனைவருக்கும் பாதுகாப்பான சூழ்நிலை ஏற்படும் வகையில் டோக்கியோ 2020 ஒலிம்பிக்கை, அடுத்த வருடம் சிறப்பாக நடத்தி முடிக்க நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம்.

ஒலிம்பிக் போட்டி ஒத்தி வைக்கப்பட்டதில் இருந்து ஒரு வருடம் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. எதி ர்காலம் திட்டம் குறித்து எந்தவொரு ஊகங்களையும் நாம் தெரிவிக்க இயலாது"என்றார்.

கடந்த மாதம் டோக்கியோ ஒலிம்பிக் போட்டி ஒத்தி வைக்கப்பட்டால் போட்டியை நடத்தும் நாட்டிற்கு ஏராள மான செலவு ஏற்படும். இருந்தாலும் நாங்கள் அதில் பெருமளவு பங்கெடுத்துக் கொள்வோம் என்று தெரிவித் திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகிலேயே மிகப் பெரிய அகதி முகாமில் கொரோனா



பங்களாதேஷ் நாட்டில் ரோஹிங்யா அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள முகாமே உலகின் மிகப் பெரிய முகாம். இங்கு இருவருக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மியான்மரில் சிறுபான்மையினராக வாழ்ந்துவந்த ரோஹிங்யா இன முஸ்லிம்களின் சில குழுக்கள் உள்நாட்டு ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களை ஒடுக்கும் நடவடிக்கையில் மியான்மர் இராணுவம் ஈடுபட்டது.

மியான்மரில் இராணுவ நடவடிக்கைகள் தொடங்கியது முதல் உயிருக்கு அஞ்சி சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான ரோஹிங்யா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி அண்டை நாடான பங்களாதேயில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவர்கள் அந்த நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட் டுள்ளனர். மிகவும் மக்கள் தொகை அடர்த்தி நிறைந்த அப்பகுதிகளில் மக்கள் கூட்டம் கூட்டமாக தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், உலகையே உலுக்கி வரும் கொரோனா வைரஸ் தற்போது பங்களாஷில் உள்ள ரோஹிங்யா அகதிகள் முகாம்களில் பரவியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹேக்ஸ் பசார் என்ற பகுதியில் அமைந்துள்ள ரோஹிங்யா அகதிகள் முகாமில் இரண்டு நபர்களுக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, சுமார் ஆயிரத்து 900 பேர் தனிமைப்படுத்தப்பட்டு கொரோனா பரிசோதனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஒரு முகாம் பகுதியின் 5 ஆயிரம் மக்கள் தொகையை கொண்ட குடியுருப்பு பகுதி முழுமையாக மூடப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 10 லட்சம் ரோஹிங்யா அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ள உலகின் மிகப்பெரிய முகாமில் கொரோனா வைரஸ் பரவியுள்ளதால் பங்களாதேஷ் அரசு அதிர்ச்சி அடைந்துள்ளது.

# வுஹானில் ஒரு கோடி பேருக்கு கொரோனா பரிசோதனை!




*சீனா, மே 16*

*சீனாவின் வுஹான் நகரில் வசிக்கும் ஒரு கோடி பேருக் கும் கொரோனா பரிசோதனை நடத்த முடிவு செய்யப்பட்டு உள் ளது.*

*சீனாவின் ஹுபெய் மாகாணத் தில் உள்ள வுஹானின் நகரில் தான் முதன்முதலில் கொரோனா வைரஸ் தோன் றியது. அங்கு இயல்புநிலை திரும்பி வருகிறது.*

*இருப்பினும், ஒரு மாத இடைவெளிக்கு பிறகு, ஒரு குடியிருப்பு வளாகத்தில் 6 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இதை யடுத்து, வுஹானில் வசிக்கும் ஒரு கோடியே 10 லட்சம் பேருக்கும் கொரோனா பரிசோதனை நடத்த அரசு முடிவு செய் துள்ளது.*

*10 நாள்களில் இதை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

# உயிரிழந்தோர் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகரிப்பு



கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு அமெரிக்காவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 87 ஆயிரத்தை கடந்துள்ளது.

தற்போதைய நிலவரப் படி, உலகம் முழுவதும் 45 லட்சத்து 86 ஆயிரத்து 519 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைரஸால் பாதிக்கப் பட்டவர்களில் 25 லட்சத்து 40 ஆயிரத்து 72 பேர் சிகிச்சை பெற்றுவருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 45 ஆயிரத்து 256 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிட மாக உள்ளது.

வைரஸ் பாதிப்பில் இருந்து 17 லட்சத்து 35 ஆயிரத்து 775 பேர் குணமடைந் துள்ளனர். ஆனாலும், இந்தக் கொடிய வைரசுக்கு 3 லட்சத்து 5 ஆயிரத்து 672 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு ஆடம் பரமாக டிசெம்பர் மாதம் கண்டுபிடிக் கப்பட்ட கொரோனா அமெரிக்காவை புரட்டி எடுத்து வருகிறது. கொரோனா பாதிப்பிலும், உயிரிழப்பிலும் அமெரிக்கா உலகஅளவில் முதலிடத்தில் உள்ளது.

# இந்தியா வாலிபர் கொலையில் 5 ஆண்டுகள் கடந்து ஒருவர் கைது

அமெரிக்காவில் இந்திய வாலிபர் குமன் சிங் கொலை செய்யப்பட்டு 7 ஆண்டு களுக்கு பின் அவரை கொலை செய்த நபரை பொலிஸார் தற்போது கைது செய்துள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் சவுத் லேக் தஹோ நகரில் வசித்து வந்த இந்தியர் மன்பிரீத் குமன் சிங் (வயது 27). இவரது பூர்வீகம் பஞ் சாப் மாநிலம் ஆகும். இவர் சவுத் லேக் தஹோ நகரில் உள்ள ஒரு காஸ் நிலை யத்தில் கணக்காளராகப் பணியாற்றி வந்தார்.

2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதி மன்பிரீத் குமன் சிங் பணி யில் இருந்தபோது, காஸ் நிலையத்துக்கு வந்த முக மூடி அணிந்த மர்ம நபர் ஒருவர் மன்பிரீத் குமன் சிங்கை துப்பாக்கியால் சுட்டார்.

இதில் அவர் குருதி வெள்ளத்தில் சரிந்து சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தார். மன்பிரீத் குமன் சிங்கின் கொலைக்கான காரணம் குறித்து பொலி ஸார் தீவிர விசாரணை நடத்தினர். ஆனால் எந்த துப்பும் கிடைக்காததால் பொலிஸார் இந்த கொலை வழக்கு விசாரணையை கிடப்பில் போட்டனர்.

இந்த நிலையில் மன்பிரீத் குமன் சிங் கொலை செய்யப்பட்டு 7 ஆண்டுகளுக்கு பின் அவரை கொலை செய்த நபரை பொலிஸார் தற்போது கைது செய்துள்ளனர். லாஸ் வேகாஸ் நகரை சேர்ந்த சீன் டோனோஹோ (வயது 34) என்பவர் மன் பிரீத் குமன் சிங்கை கொலை செய்தது விசாரணையில் தெரியவந்ததை தொடர்ந்து, பொலிஸார் அவரைக் கைது செய்ததாக அங்கிருந்து வரும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

# மேலும் இரண்டு வாரங்களுக்கு ஊரடங்கை நீடிக்கக் கோரிக்கை

## அசாம் மாநில முதல்வர் மோடிக்குக் கடிதம்



இந்தியா முழுவதும் நடைமுறையில் உள்ள ஊரடங்கு உத்தரவை மேலும் 2 வாரங்களுக்கு நீட்டிக்க வேண்டும் என மத்திய அரசுக்கு அசாம் முதல்வர் சர்பானந்த சோனோவால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இந்தியா முழுவதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 3ஆம் கட்ட ஊரடங்கு இன்னும் இரண்டு நாட்களில் நிறைவடைய உள்ள நிலையில், ஊரடங்கு நீட்டிக்கப்படும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இந்த ஊரடங்கு முற்றிலும் மாறுபட்ட வடிவத்தில் இருக்கும் என்றும் அவர் கூறி உள்ளார். இந்த ஊரடங்கு காலத்தில் பொது போக்குவரத்துக்கு அனுமதி அளிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஊரடங்கை மே 17ஆம் திகதிக்குப் பிறகு மேலும் 2 வாரங்களுக்கு நீட்டிக்கும்படி அசாம் முதல்வர் சர்பானந்த சோனோவால் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக மத்திய அரசுக்குத் தான் கடிதம் அனுப்பியிருக்கிறார் என்று அவர் கூறி உள்ளார்.

4ஆம் கட்ட ஊரடங்கின்போது விதிமுறைகளை மேலும் தளர்த்தினால் கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதனால் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் கட்டுப்பாடுகள் தொடருவதற்கே அதிக வாய்ப்பு உள்ளது. மும்பை, புனே மற்றும் கொரோனா பாதிப்பு அதிகமுள்ள பகுதிகளில் மே 31 வரை ஊரடங்கை நீட்டிக்க மகாராஷ்டிர அரசு முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



## தேனீ வளர்ப்புக்கென ரூ. 500 கோடி ஒதுக்கீடு

தேனீ வளர்ப்பு மற்றும் தேன் உற்பத்தியை ஊக்குவிக்க 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதாக இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த 12ஆம் திகதி இரவு நாட்டு மக்களிடம் உரையாற்றும் போது, பொருளாதாரத்தை மீட்கும் வகையில் 20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தார்.

இதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த 20 லட்சம் கோடி ரூபாய்க்கான திட்டங்களுக்கு 'தன்னிறைவு இந்தியா' என்ற பெயரில் பல கட்டங்களாக நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவிப்புகளை வெளியிட்டார்.

# இராணுவத் தலைமையகத்தின் ஒரு பகுதியை மூடியது இந்தியா

## கொரோனா தொற்று பரவியதால்

இந்தியத் தலைநகர் டெல்லியில் உள்ள இராணுவ தலைமையகத்தில் பணியாற்றும் படையினர் ஒருவருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதையடுத்து அலுவலகத்தின் ஒரு பகுதி மூடப்பட்டது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் வேகமெடுத்துள்ள அதேசமயம், நோய்த்தொற்று மற்றும் உயிரிழப்புகளும் அதிகரித்தவண்ணமே உள்ளன. நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மருத்துவத் துறை, காவல்துறையைச் சேர்ந்த பலருக்கும் கொரோனா பரவி உள்ளது.

இராணுவத்தையும் கொரோனா விட்டு வைக்கவில்லை. எல்லைப் பாதுகாப்பு படை, கடற்படையைச் சேர்ந்த பலருக்கும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டு, அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.



இந்த நிலையில், டெல்லியில் உள்ள இராணுவத் தலைமையகமான சேனா பவனில் பணியாற்றி வரும் ஒரு வீரருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து அவர் வேலை பார்த்த பகுதி மட்டும் மூடப்பட்டது. அங்கு சுத்தம் செய்யப்பட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணி நடைபெறுகிறது.

பாதிக்கப்பட்ட படைச் சிப்பாய் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து தனிமைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அதிகாரி ஒருவர் கூறி உள்ளார்.

## இந்தியப் பிரதமருக்கு ஐ.நா. நிபுணர் பாராட்டு

இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ள ரூ. 20 லட்சம் கோடி பொருளாதார சிறப்பு திட்டங்கள் குறித்து ஐ.நா. பொருளாதார நிபுணர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு மற்றும் உள்ளிருப்பு முடக்கத்தால் பாதாளத்தினுள் பாய்ந்துள்ள இந்தியப் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்காக பிரதமர் மோடி, ரூ. 20 லட்சம் கோடி பொருளாதார சிறப்பு திட்டங்களை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக, உலகளாவிய பொருளாதார கண்காணிப்பு பிரிவு தலைவர் ஹமிது ரஷித், "இந்தியாவின் அறிவிப்பு மிகவும் வரவேற்புக்குரியது. வளரும் நாடுகளின் பொருளாதார திட்டங்களில், இதுதான் மிகப்பெரியது. இதை நடைமுறைப்படுத்தும் திறனும் இந்தியாவுக்கு உள்ளது. இந்தத் திட்டத்தின் வடிவமைப்பைப் பொறுத்து இதன் தாக்கம் அமையும்" எனத் தெரிவித்துள்ளார்.

## பத்து நாள்களில் மட்டும் ரூ. 400 கோடி வருமானம்

### டெல்லியில் மதுக் கடைகளால் மட்டும் வந்தது



கொரோனா வைரஸ் தொற்று அச்சத்திற்கும் மத்தியிலும் டெல்லியில் 10 நாள்களில் 400 கோடி ரூபாய்க்கு மதுபானம் விற்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 2ஆம் கட்ட ஊரடங்கு முடிந்து 3ஆம் கட்ட ஊரடங்கு 4ஆம் திகதி தொடங்கப்பட்டது. அப்போது மதுபானக் கடைகளை திறக்கலாம் என மத்திய அரசு தெரிவித்தது.

மதுபானக்கடைகளை திறந்தால் கொரோனா வைரஸ் தொற்று அதிகமாக வாய்ப்புள்ளது என்று கூறியபோதிலும், மாநில அரசுகள் கடைகளைத் திறந்தன.

டெல்லியில் நூற்றுக்கணக்கானோர் நீண்ட வரிசையில் சமூக இடைவெளியை கடைபிடிக்காமல் மதுபாட்டில் வாங்க குவிந்தனர். டெல்லி அரசு 'சிறப்பு கொரோனா கட்டணம்' என்ற பெயரில் விலையை உயர்த்தியது.

இருந்தாலும் 10 நாட்களில் 400 கோடி ரூபாய்க்கு மதுபானம் விற்கப்பட்டதாக டெல்லி அரசு தெரிவித்துள்ளது. சிறப்பு கொரோனா கட்டணம் மூலம் 155 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாம்.

# மதுபானம் வாங்குவதற்கு இனி ஆதார் அட்டை தேவையில்லை

## தமிழ்நாடு அரசுக்கு ஆதரவாக உயச்ச நீதிமன்றம் உத்தரவு

தமிழ் நாட்டில் அரச மதுபானக் கடைகளில் மதுபானம் வாங்க வருவோர் ஆதார் அட்டை கொண்டு வரத் தேவையில்லையென்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு காலத்தில் தமிழ்நாட்டில் மீண்டும் திறக்கப்பட்ட மதுக்கடைகளை மூட சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்தது.

தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு மீது விசாரணை நடத்திய உச்சநீதிமன்றம், கடைகளை மூடும்படி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவிற்கு இடைக்காலத் தடை விதித்தது.

இதையடுத்து, தமிழகத்தில் மதுபானக் கடைகளைத் திறக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. மேலும் மதுக் கடைகளில் மது வாங்க சிவப்பு, மஞ்சள், பச்சை உள்ளிட்ட 7 வண்ணங்களில் டோக்கன் வழங்க மது விற்பனை நிலையங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

தமிழகத்தில் கொரோனா தொற்று அதிகமுள்ள பகுதிகளைத் தவிர பிற இடங்களில் மதுபானக் கடைகள் நாளை திறக்கப்படுகிறது.

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி சமூக இடைவெளியைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.



கொரோனா தொற்று அதிகமுள்ள பகுதிகளை தவிர பிற பகுதிகளில் மதுக் கடைகள் திறக்கப்பட உள்ளன. சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடைகள் திறப்பு இல்லை.


இந்த நிலையில் தமிழகத்தில் மதுக் கடைகளில் மதுபானம் வாங்க வருவோர் ஆதார் அட்டை கொண்டு வரத்தேவையில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மதுக்கடைகளுக்கு வருவோர் ஆதார் அட்டை கொண்டு வர வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் விதித்த கட்டுப்பாட்டை உச்சநீதிமன்றம் தளர்த்தி உத்தரவிட்டுள்ளது.




**இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**
**இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு –‘சிறுவர் பூங்கா’**


படம் 1
இ. கார்த்திகன் - தரம் - 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி


படம் 2
றொபின்சன் ஷெர்வின் - தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு


படம் 3
கசிந்திரா கிறிஸ்பின் - தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

**நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘பனை யோலை விசிறி’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர்.**
**தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்த வர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.**

த. கபிலாஷ் - தரம் 8
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

த. யதுனேஷ் - தரம் 4
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

லனுஜன் நவரட்ணம் - தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

ம. அட்சையன் - தரம் 3
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

ம. யதோட்சயன் - தரம் 8
யா/ மத்திய கல்லூரி

எட்ரியன் லுகி ஜோன் - தரம் 8
ஓகேஜ சர்வதேச பாடசாலை, வத்தளை

எம்.ஆர்.எம்.ராத் - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். ஆர். எவ். நஸ்மியா - தரம் 10
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

ஜி. பவித்திரன் - தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

திலகராஜ் திலக்சயன் - தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

ஆர். அஜின் - தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம் - 9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன் - தரம் - 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

சிறாந்தி சிறிசுதாகரன் - தரம் 1
யா/ உடுவில் மகளிர் கல்லூரி

பென்சித் றஜாந்தி சிறிசுதாகரன் - தரம் 5
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

வி. தனிஷ்ரன் -தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

ஞா. ரிசாந் - தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் - தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

எஸ். சஞ்சயன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ் சாருகா - தரம் 8
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

விஜயநிதி கருன்- தரம் 7
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

எஸ் சுஜினா - தரம் 6
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

ஐங்கரன் ஆரணி - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

என். கொட்வின் - தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

அன்றியா தக்ஷரா காண்டீபன் - தரம் 2
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## சிறுவர் பூங்கா




**இன்று (16/05/2020) தலைப்பு**
**சிறுவர் பூங்கா**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோ ரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முக வரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# விபத்தில் பலியான இரு சகோதரிகளுக்கு நீதிகோரி மன்னாரில் நேற்றுப் போராட்டம்



மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, பரப்பான் கண்டல் சந்தியில் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இடம் பெற்ற விபத்தில் சகோதரிகள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை செலுத்தி வந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு உடனடியாக மன்னார் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த நிலையில் இந்த இரு சகோதரிகளின் மரணத்துக்கும் நீதி கோரி குடும்ப உறவுகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைதியான முறையில் சமூக இடை வெளிகளைப் பேணி, பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு கண்டன போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

எனினும் சம்பவ இடத்துக்கு சென்ற மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு மக்கள் ஒன்று கூடி இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்றும் அங்கிருந்து உடனடியாக செல்லுமாறு கோரிக்கை விடுத்தார்.

எனினும், அவர்கள் அவ்விடத்தில் இருந்து செல்லாத நிலையில் பொலிஸாரின் உதவியுடன் போராட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என சுமார் 16 பேர், மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதோடு, இவ்வாறான போராட்டங்களை தற்போதைய சூழ் நிலையில் செய்ய முடியாது என எச்சரித்ததோடு, பிரச்சினை தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் உதவியை நாடுமாறு கோரிக்கை விடுவித்தனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் இருந்து வீடு திரும்பியுள்ளனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

மன்னார் அஞ்சல் அதிபராக கடமையாற்றிய சந்தியோகு றெறன்சியா(வயது - 25), வைத்திய சாலை பெண் பரிசோதகராக கடமையாற்றும் லின்ரா கோபிநாதன்(வயது - 42) இரண்டு பிள்ளைகளின் தாய் ஆகிய இரு சகோதரிகளும் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி மதியம் மன்னார் பரப்பான் கண்டல் வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் இரண்டு சகோதரிகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்தை ஏற்படுத்தியவர் கைது செய்யப்பட்டு பின்னர் மன்னார் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

விபத்தில் உயிர் இழந்த சகோதரிகளின் சடலம் அடக்கம் செய்யப்படுவதற்கு முன்னரே விபத்தை ஏற்படுத்திய நபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

உயிரிழந்த இரு சகோதரிகளுக்கும் உரிய நீதி கிடைக்க வேண்டும். இப்படியான ஒரு சம்பவம் இனி இடம் பெறக்கூடாது.

பணம் இருந்தால் எதனையும் செய்ய முடியும் என்பதற்காக ஏழைகளுக்கு அநீதி இடம் பெறக் கூடாது.

எனவே குறித்த இரு சகோதரிகளுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவே குடும்ப உறவினர்களாகிய நாங்கள் அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தோம் - என்றனர்.

# அம்பாறை அட்டாளைச்சேனையில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

அம்பாறை, மே 16

கொரோனா வைரஸ் அனர்த்தத்தின் பின்னர், அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் இஸ்ஸதீன் லத்தீப் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்ட காலங்களில் மனித உரிமை தொடர்பிலான அறிக்கை குறித்த ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய தகவலிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக மகளிர் அமைப்புகள், மனித உரிமை ஆணையத்துக்கு முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

அதேபோன்று, பொத்துவில், அட்டாளைச் சேனை, சாய்ந்தமருது பிரதேசங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகிறன.

“மேலும், இந்த ஊரடங்குக் காலத்தில், சமூக விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. சட்ட விரோத மதுபான உற்பத்தி குறித்து, அக்கரைப்பற்று, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிலும் இருந்து அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றார்.

# அம்பாறையில் நேற்று மாலை பலத்த காற்று, பெரும் மழை!







அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நேற்று மாலை 5 மணியளவில் திடீரென வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகினர்.

அம்பாறை நகரப்பகுதி, காரைதீவு, கல்முனை, மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மணல்சேனை மற்றும் சம்மாந்துறை, சவளைக்கடை, மத்திய முகாம் போன்ற பகுதிகளில் வீசிய சுழல் காற்றுக் காரணமாக வீதிகளில் அதிகளவிலான தூசு மண் வீசப்பட்டன. இதனால் பயணிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகினர். சில பகுதிகளில் பாரிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளமையால் வீதிப் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்பட்டன.

சில பகுதிகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மழை நீர் தேங்கி வெள்ள நிலைமை ஏற்பட்டிருந்தது.

தற்போது காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் விழிப்புடன் செயற்படுமாறு பல்வேறு தரப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் பலவற்றிலும் நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மாலை வேளையில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகின்றது. இதனால் தற்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதோடு, மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக, மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# மே 18 இல் 18.18 மணிக்கு தமிழர்கள் எங்கிருந்தாலும் விளக்கேற்றுவோம்

## மாவை சேனாதிராசா அழைப்பு

அடக்குமுறை ஒடுக்குமுறைக்குள்ளான ஒரு இனம் தங்கள் தேசத்தின் விடுதலைக்காக விடிவுக்காகத் திடசங்கற்பங் கொண்ட மக்கள் இலங்கையிலும், உலகில் எங்கிருந்தாலும் மே 18ஆம் நாளை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலி செலுத்த வேண்டும். விடுதலை பெற அர்ப்பணிப்போமென திடசங்கற்பத்துடன் உறுதி பூணவேண்டும். 18.18.18 மணி நேரத்தில் அந்த அஞ்சலியை நிறைவு செய்ய வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதனைப் பின்பற்றி தமிழின விடுதலைக்கு வித்துடல் விதைத்த அந்த மக்கள் ஆத்மசாந்திக்காக நீர் ஏரி, கடல் ஓரங்களில் ஈமக் கடனியற்றுவோர், கோவில்களில், வீடுகளில் அமைதியாக விளக்கேற்றி அஞ்சலிப்போம்.

- இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழின விடுதலைப் போராட்டம், தமிழ்த் தேசத்தின் சுதந்திர மீட்சிப் போராட்டம் தொடங்கி ஏழு தசாப்தங்களை எட்டிவிட்டது. முப்பது ஆண்டுகள் ஜனநாயக அறவழிப் போராட்டங்கள் அரசுகளின் இராணுவ அடக்குமுறைக்கு ஒடுக்குமுறைக்கு உள்ளானது. இனக்கலவரங்கள் தமிழ்மொழி பேசும் மக்களுக்கு எதிராக 1958 லிருந்து 1983வரை நாடு முழுவதும் பலதடவைகள் அவிழ்த்து விடப்பட்டன.

அடக்குமுறைக்கு அடங்க மறுத்து எழுச்சி கொண்ட தமிழ் இளைஞர் சமுதாயத்திலிருந்து எழுந்த ஆயுதவழிப் போர் முப்பது ஆண்டுகள் மூன்று தசாப்தங்களையும் கடந்து சர்வதேசம் வரை எட்டி நின்றது.

சர்வதேச அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் - தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே 2002ல் போர்நிறுத்தமும் இலங்கைத் தமிழர் தேச மக்கள் விடுதலைக்குப் பேச்சுக்களும் உடன்பாடுகளும் நோர்வே ஒஸ்லோ நகரில் இடம்பெற்றது. ஜனநாயக சக்திகளும் போராட்ட சக்திகளும் ஒன்றுபட்டு உயர்ந்து நின்றன. தமிழர் உச்ச பலம் வெற்றியின் விளிம்பில் மீண்டும் ஏமாற்றம் - மீண்டும் மூண்டது போர்.

சர்வதேச சந்தர்ப்பம் தடுமாறிய நிலையில் 2009 மே 18ல் தாயக மண்ணில் இலட்சக்கணக்கில் எம் தமிழ் மக்கள் விடுதலைக்கு வித்துடலங்களாய் வீழ்ந்தன. அந்த உச்ச விடுதலை விளைநிலத்தின் அடையாளம் தான் முல்லையில் முள்ளிவாய்க்கால் முற்றம். அங்கும் விடுதலை வேண்டிய ஆத்மாக்களுக்கு அஞ்சலி நினைவேந்தல் சுடரேற்றம் ஆண்டுதோறும் இடம்பெறுகிறது.

இலங்கையிலும் உலக நாடுகளிலும் தமிழின விடுதலைப் போரில் உயிரைப் பலிகொடுத்தவர்கள், அவர்கள் குடும்பங்கள், பாதிக்கப்பட்ட போராளிகள், அங்கவீனர்கள், காணாமல் போனோரின் குடும்பங்கள் தமிழின விடுதலை மீது விசுவாசம் கொண்டவர்கள் பல இலட்சம் குடும்பங்கள் மே.18 இல் கண்ணீர் அஞ்சலி செலுத்துவர். வாழ்நாள் முழுவதும் கண்ணீருடன் துன்ப துயரத்துடன் வாழ்கின்றனர்.

### முள்ளிவாய்க்காலில் ஒரு நினைவிடம்

தமிழகத்தில் தஞ்சையில் ஈழப்போர் நினைவிடம் பெரியார் பழ. நெடுமாறன் தலைமையில் அறக்கட்டளையினால் உருவாக்கப்பட்டு நிருவகிக்கப்படுகிறது. அது போல் இலங்கையில் முள்ளிவாய்க்காலில் நினைவிடம் ஒன்று நிறுவப்பட்டு அறக்கட்டளையினால் நிர்வகிக்கப்படுவதற்கு பொருத்தமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். சர்வதேச தமிழ் மக்களும் நிச்சயம் அந்த நினைவிடத்திற்கு உதவியாயிருப்பார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் மக்கள் ஒன்று கூடுவதற்கு கட்டுப்பாடுகளுண்டு. அஞ்சலிப்போர் முகக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். திரளாக மக்கள் நடமாடுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். மருத்துவ நிபுணர் அமைப்புக்களின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றியே நடத்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

எங்கும் 210 நாடுகளில் கோவிட் - 19 வைரஸ் தொற்று பரவியிருக்கிறது. இலங்கையிலும் அதே நிலமைகள் தான். ஆயினும் மே 18ஆம் நாளை நாம் நினைவு கூர்ந்தேயாகவேண்டும்.

அடக்குமுறை ஒடுக்குமுறைக்குள்ளான ஒரு இனம் தங்கள் தேசத்தின் விடுதலைக்காக விடிவுக்காகத் திடசங்கற்பங் கொண்ட மக்கள் இலங்கையிலும், உலகில் எங்கிருந்தாலும் மே 18ஆம் நாளை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலி செலுத்த வேண்டும். விடுதலை பெற அர்ப்பணிப்போமென திடசங்கற்பத்துடன் உறுதி பூணவேண்டும். 18.18.18 மணி நேரத்தில் அந்த அஞ்சலியை நிறைவு செய்ய வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதனைப் பின்பற்றி தமிழின விடுதலைக்கு வித்துடல் விதைத்த அந்த மக்கள் ஆத்மசாந்திக்காக நீர் ஏரி, கடல் ஓரங்களில் ஈமக் கடனியற்றுவோர், கோவில்களில், வீடுகளில் அமைதியாக விளக்கேற்றி அஞ்சலிப்போம்.

முள்ளிவாய்க்காலிலும் அந்தந்த மாவட்டங்களிலும் வீடுகளிலும் அமைதியாகச் சுடரேற்றிப் பிரார்த்தித்து அஞ்சலி செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.
- என்றுள்ளது.



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## துணைவேந்தர் பதவி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்;களின் பேரில் செயற்படுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்கள்/பெயர்மொழிவுகளுக்காக அழைப்பு விடுகின்றது. பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் இலங்கைப் பிரஷ்ஜையாகவும் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அது வரை பதவி வகிப்பார்.

கற்பித்தல், கற்றல், ஆராய்ச்சி, புலமைத்துவம் என்பவற்றுக்கான உன்னத நிலையங்களுள் தலையாயதாக விளங்குவதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர்நோக்காகும். உயர்கல்வியின் தரநிலையை உயர்த்து வதும் பொதுவாக நாட்டினதும் குறிப்பாக வடமாகாணத்தினதும் அபிவிருத்திக்கு பொருந்திவரக் கூடிய ஆராய்ச்சியை ஊக்குவிப்பதும் அதன் முன்னுரிமைகளாம். இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் ஏழு பீடங்களையும் கிளிநொச்சியில் மூன்று பீடங்களையும் வவுனியா வளாகத்துடன் அமைந்த மூன்று பீடங்களையும் (எல்லாமாக 13 பீடங்களை) கொண்டமைந்து ஏறத்தாழ பதினோராயிரம் பட்டதாரி மாணவர்களையும் அறுநூறு உயர் பட்டதாரி மாணவர்க ளையும் கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக் கைகளுக்கு வலுவூட்டித் துணை புரியமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர் நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங் காண்பதற்;கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரிஃ பெயர் மொழியப்பட்டவர் கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதிறப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பல்திறப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற்திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது.

பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மைஇ பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக் கொண்ட காரியத்தின் தஷ்;மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத் திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

விண்ணப்பங்கள்/ பெயர் மொழிவுகளுடன் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.

1. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.

2. விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.

3. தற்போது இப் பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி/ பெயர் மொழியப்பட்டவராயின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையில் அறிக்கையொன்றைக் கையளிக்க வேண்டும்.

4. பெயர் மொழிவுகளாயின் பெயர் மொழியப்பட்டவரின் இணக்கக் கடிதம்.

5. விண்ணப்பதாரி/பெயர் மொழியப்பட்டவர் அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப் படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

விண்ணப்பங்கள், பெயர் மொழிவுகள் 'பேரவைச் செயலாளர், பதிவாளர் செயலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்' என முகவரியிட்டு மூடிய கடித உறையில் 09.06.2020 அன்று பி.ப 3.00 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள்/ பெயர்மொழிவுகளுக்கான முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டுக் குழுவின் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் எண் 02/2020 சுற்றறிக்கையில் எடுத்துக்கூறப்பட்ட கட்டமைப்பு அம்சங்களுக்கேற்ப நடாத்தப்பெறும். இந்நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட இம்மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்திற்கு வேட்பாளர் அழைக்கப்படுவார். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/en/policy/commission-circulars/176- circulars-published-in-2020-012020-and-above/2198-commission-circular-no-022020-appoinment-tothe-post-of-vice-chancellor.html இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தவிர்க்க முடியாத சூழ்நிலையொன்றில் வேட்பாளர் ஒருவர் மதிப்பீட்டுக் குழுவின் முன் சமுகமளிக்க முடியாது போகும் வேளையில் அவர் காணொலி மாநாடு (video conference) ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படலாம்.

பல்கலைக்கழக பேரவையின் விசேட கூட்டமொன்று, மூன்று பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விதந்துரைப்பதற்காக, மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத் திகதியன்றே கூட்டப்படும்.

மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு நிரைப்படுத்தி சுருக்கிய பேரவையினால் ஒப்புதல் அளிக்கப்பெற்ற பட்டியலில் உள்ள வேட்பாளர்கள் அப்பேரவைக் கூட்டத்திற்கு ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு அழைக்கப்படுவர். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போதோ மதிப்பீட்டின் போதோ பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். தவிர்க்கமுடியாத சூழ்நிலையொன்றில் வேட்பாளர் ஒருவர் பேரவையின் விசேட கூட்டத்தின் முன் சமுகம் அளிக்க முடியாது போகும் வேளையில் அவர் காணொலி மாநாடு (video conference) ஊடாக சமுகமளிக்க அனுமதிக்கப்படலாம்.

விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02ஃ2020 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

மேற்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 02/2020 இன்படி எமது 08.08.2019 அன்று திகதியிடப்பட்டு விண்ணப்பங்கள்/பெயர் மொழிவுகளைக் கோரிய முன்னைய விளம்பரமும் அதன்பின்னர் இவ்விடயம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் வலிதற்றதாக்கப்பட்டிருப்பதையும் துணைவேந்தர் நியமனத்திற்கான செயன்முறைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைவாக புதிதாக தொடங்குகின்றன என்பதனையும் அறியத்தருகிறேன்.

முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படா.

விசுவநாதன் காண்டீபன்
பதிவாளரும் பேரவையின் செயலாளரும்
பதிவாளர் செயலகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
15.05.2020

# புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயுடன் நேற்று அமைச்சர் டக்ளஸ் தொலைபேசி ஊடாக உரையாடல்





கொழும்பு,மே 16

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே - அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இடையே இரு நாடுகளுக்கிடையிலான நல்லெண்ணம் குறித்து நேற்று தொலைபேசியில் உரையாடல் இடம் பெற்றுள்ளது.

இந்த உரையாடலின்போது சமகால அரசியல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன. தம்மால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் இந்தியாவின் நல்லெண்ணம் மேலும் வலுப்பெறும் என்று புதிய இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவரோடு இணைந்து தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தேவையான இந்திய உதவிகளை பெற்றுக்கொள்வதில் கூடுதல் முயற்சிகளை முன்னெடுக்க முடியும் என்ற நம்பிக்கையை தூதுவர் கோபால் பால்கே அவர்களின் கருத்து ஏற்படுத்தியுள்ளது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதே நேரம் இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக பொறுப்பேற்றிருக்கும் கோபால் பால்கேயை தமிழ் மக்கள் சார்பில் வரவேற்கிறார் என இந்த உரையாடலின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

- இப்படி ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பு தெரிவித்தது.

## மண நிகழ்வுகளுக்கு அனுமதி

ஸ்ரீலங்காவில் கொரோனாவால் தடைப்பட்டிருக்கும் திருமண நிகழ்வுகளை மீண்டும் நடத்துவதற்கு விரைவில் அனுமதி வழங்கப்பட உள்ளது.

எதிர்வரும் நாள்களில் திருமணம் செய்யவுள்ளவர்களுக்கு அதற்கான அனுமதியை வழங்கவுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அனில் ஜாசிங்க தெரிவிக்கின்றார்.

ஆனால் மிகுந்த கட்டுப்பாடுகளை விதிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திருமண மண்டபம் அல்லது திருமணம் செய்கின்ற இடங்களில் குறைந்த எண்ணிக்கையிலானவர்களே கலந்துகொள்ள அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதுகுறித்த சட்டதிட்டங்களை எதிர்வரும் நாள்களில் அறிவிக்கவுள்ளனர் எனவும் டாக்டர் அனில் ஜாசிங்க கூறினார்.

கொரோனா பரவல் காரணமாக பலரது திருமணம் தடைப்பட்டு உள்ளது. எனினும் ஒரு சில இடங்களில் மிகவும் எளிமையான முறையில் திருமணம் நடத்தப்பட்டுள்ளது.




## வவுனியா வைத்தியசாலையில் சிறிய கத்தியுடன் ஒருவர் கைது

வவுனியா வைத்தியசாலை வளாகத்தில் சிறியளவிலான கத்தி ஒன்றினை வைத்திருந்த குற்றசாட்டில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருபவை வருமாறு:-

வவுனியா, கண்டிவீதி, மூன்று முறிப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இரு தரப்புக்கு இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் பெண்கள் இருவரும், ஆண் ஒருவரும் காயமடைந்தனர் எனத் தெரிவித்து வவுனியா வைத்தியசாலையின் விபத்து பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்களைப் பார்வையிடுவதற்காக வைத்தியசாலை வளாகத்தில் அவர்களது உறவினர்கள் சிலர் ஒன்று கூடியிருந்தனர்.

இந்த நிலையில் வைத்தியசாலை வளாகத்துக்குள் கத்தியுடன் ஒருவர் நிற்பதாக வைத்தியசாலை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, குறித்த நபர் கைது செய்யப்பட்டு வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமையுடன், அவர் வைத்திருந்த சிறிய கத்தியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




## ரூ.10 லட்சம் நகை, பொருள்கள் இரவு வீட்டுக்குள் புகுந்த சூறை!

### மட்டக்களப்பு காரைதீவில் சம்பவம்

மட்டக்களப்பு, மே 16

நள்ளிரவில் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் நகை, சைக்கிள் மற்றும் போன் உள்ளிட்ட சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள் களைச் சூறையாடிக் கோண்டு தப்பிச்சென் றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு காரைதீவில் இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறைப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட காரைதீவு 9ஆம் பிரிவில் வசிக்கும் மனோ கரன் பிரபாகரன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவில் இடம்பெற்ற இச்சம்பவத்தால் குடும்பத்தினர் ஆடிப்போயுள்ளனர். சம்மாந் துறைப்பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

சம்மாந்துறை பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்குச்சென்று மோப்பநாய் சகிதம் தேடுதல் களையும் விசாரணைகளையும் முடுக்கிவிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தால் கொரோனாப் பீதிக்கு மத் தியில் காரைதீவு மக்கள் திருடர் அச்சத்தில் மூழ்கியுள்ளனர்.

அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் பல அப்பகுதியில் இடம்பெற்று வந்துள்ளன. ஆனால் இச்சம்பவம் மில்லியன் ரூபா பெறு மதியாகையால் கூடுதல் தொகையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.05.2020 இல் வெளியிடப்பெற்றது.